**பஸ்பாகே கோரளை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

நிதிக் கூற்றுக்களானவை உடபலாத பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மூலதன உதவிக் கணக்கில் மத்திய அரசில் இருந்து சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 40,854,109 இற்கான பெறுமதியில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 246,312 ஆகியுள்ளது.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,205,833 ஆக காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

----------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,554,431 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,560,300 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,005,869 இற்கான குறைவடைதல் ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகை முன்னையாண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 6,005,869 இனால் குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2014 ஆண்டின் போது 02 வருமான விடயங்களில் வருமானம் நூற்றிற்கு 38 முதல் நூற்றிற்கு 93 இற்கான வீச்சில் குறைவடைதலும் 04 விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 491 வரை வீச்சில் மிகைத்தலும் காரணமாகியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரின் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2014.01.01 திகதிக்கு நிலுவை | 2014 ஆண்டின் போது சிட்டையிடல் | 2014.12.31 திகதி உள்ளவாறு நிலுவையில் அறவீடு | ஆண்டின் போது சிட்டை இட்டவற்றின் அறவீடு | 2014.12.31 திகதி நிலுவை: 2014.01.01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவையில் | 2014.12.31 திகதி நிலுவை: ஆண்டின் போது சிட்டை இட்டவற்றில் | 2014.12.31 திகதி நிலுவை: மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி | 342,883 | 570,873 | 196,995 | 450,507 | 145,888 | 120,366 | 266,254 |
| வாடகை , குத்தகை | 31,260 | 179,768 | 28,379 | 166,818 | 2,881 | 12,950 | 15,831 |
| அனுமதிப்பத்திரங்கள் | - | 670,336 | - | 669,832 | - | 504 | 504 |
| ஏனையவை | 2,012,086 | 3,306,995 | 629,504 | 2,475,361 | 1,382,582 | 831,634 | 2,214,216 |
| மொத்தம் | 2,386,229 | 4,727,972 | 854,878 | 3,762,518 | 1,531,351 | 965,454 | 2,496,805 |

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 2,496,805 ஆகும்.

2.3.2 வாடகை

சபைக்குச் சொந்தமான 15 கடைகள் 05 வருடத்திற்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் ஒரு கடை 2008 ஆண்டு முதல் மற்றும் ஏனைய கடைகள் 2013 ஆண்டு முதல் 30 வருட குத்தகை காலப் பகுதிக்காக வாடகைக்கு வழங்கியிருந்தமையால் சபை பாரிய வரி வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

2.3.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனை அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 3,100,000 உம் மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 2,865,735 தொகையொன்று கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

2006 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டிட விண்ணங்கள் 1156 தொடர்பாக கட்டிடங்கள் குறித்துள்ளவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளனவா என பரிசோதனை மேற்கொண்டு இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) ரூபா 142,844,998 இற்கான காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமை, காணி உறுதிகள், சாட்டுதல் கட்டளைகள் மற்றும் வரைபுகள் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி இலக்கம் 218 இன் பிரகாரம் சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து திடீர் விபத்துகளின் போது பயன்படுத்துவதற்காக 2012 ஆண்டின் போது வழங்கியிருந்த கொங்கிரீட் கலவை இயந்திர முக்கூட்டு வளி மின் சக்தியில் செயற்படுத்துவதற்கான வசதிகள் காணப்படாமையால் பழைய பிரதேச சபை கட்டிட வளவில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய விதமாக பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது.

3.4 செயற்திட்டங்கள் தாமதித்தல்

பலன்தொட வடக்கு சனசமூக நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,500,000 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் வேலைப் பகுதிகள் சுமார் 50% நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எதிர்ப்பின் காரணமாக நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 20 முதல் நூற்றிற்கு 230 வரையும், 08 செலவு விடயங்களில் நூற்றிற்கு 14 முதல் நூற்றிற்கு 296 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் உப அத்தியாயம் 4.2 இன் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்